# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

## Sessions Case No.7/2020

Deposition of witness for : PW-6

Name : ராஜேஸ்வரி

Father's / Husband Name : ரவீந்திரநாத்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Law and recording the Deposition of the Witness on 6th day of November 2025.

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை:–**

நான் தற்போது மாநகராட்சி துவக்கப்பள்ளி திருவிக பாதையில் உள்ள பள்ளியில் தலைமை ஆசிரியராக பணிபுரிந்து 31.10.2014 ம் தேதி பணி ஓய்வு பெற்று அம்மாபேட்டையில் குடியிருந்து வருகிறேன். கடந்த 03.02.2019 ம் தேதி அதே பள்ளியில் தலைமை ஆசிரியராக பணிபுரிந்து வந்தபோது அங்கு இரவு 07.00 மணியளவில் நான் குடியிருக்கும் பகுதியில் நான் வேலை செய்யும் பள்ளியின் முதல் தளத்தில் ஒரு கொலை நடந்திருப்பதாகவும்

கேள்விபட்டேன். நான் கேள்விபட்டு ஜீவஜோதி என்பவருக்கு தகவல் கொடுத்து பள்ளியின் முதல் மாடியில் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தோம். அப்போது அங்கு இருட்டாக இருந்தது. பிறகு என்னிடம் இருந்த செல்போன் டார்ச் வெளிச்சத்தில பார்த்தபோது அங்கு இரத்தக்கறை படிந்த செங்கல் துண்டுகள் கிடந்தது, பிறகு அங்கு அம்மாபேட்டை காவல் ஆய்வாளர் அவர்கள் அங்கு வந்தார்கள். அன்றைய தினமே 07.45 மணியளவில் ஆய்வாளர் வந்து சம்பவ இடத்தை என் முன்னிலையும் உதவி ஆசிரிசயர் ஜீவஜோதி முன்னிலையிலும் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அந்த பார்வை மகஜரில் நானும் ஜீவஜோதி என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். அந்த பார்வை மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். அந்த பார்வை மகஜர் **அதசாஆ.2** ஆகும்.

அதன்பிறகு சம்பவ இடத்திலிருந்து காவல் ஆய்வாளர் அவர்கள் இரத்தக்கறை படிந்த சிமென்ட் செங்கல் துண்டுகள் இரண்டையும், மேலும் இரத்தக்கறை படிந்த காரை சிறிதளவும், இரத்தக்கறை படியாக காரை சிறிதளவும் எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயாரித்து கைப்பற்றினார்கள். அந்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அதசாஆ.3** ஆகும். இரத்தக்கறை படிந்த சிமென்ட் செங்கல் துண்டுகள் இரண்டு எண்ணிக்கை **சாபொ.1 (2 எண்ணிக்கை)** மேலும் இரத்தக்கறை படிந்த காரை **சாபொ.2**, இரத்தக்கறை படியாக காரை **சாபொ.3** நீதிமன்றத்தில் உள்ளதுதான். அதுசம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)</u>**

மேற்படி பள்ளியில் 17 ஆண்டுகளாக தலைமை ஆசிரியராக பணிபுரிந்து வந்தேன். சம்பவ தினம் ஞாயிற்று கிழமை. சம்பவ இட பள்ளிக்கு எதிரில் உள்ள பள்ளிக்கு சொந்தமான மைதானத்தில் அருகில் உள்ள காலனியை சேர்ந்த நபர்களும் எம்எல்ஏ செல்வராஜ் ஏரியாவை சேர்ந்தவர்களும் கிரிக்கெட் விளையாடுவதும், கிட்டிபுல் எப்போதும் விளையாடுவதும் வாடிக்கை என்று சொன்னால் – சரிதான், ஆனால் 2013 முதல் அங்கு யாரும் விளையாடுவதில்லை.

உங்கள் பள்ளிக்கு கேட்டிற்கு பூட்டு போடுவதில்லை என்று சொன்னால் – சரியல்ல, கேட்டை பூட்டி வைப்பது வழக்கம். மேற்படி எங்கள் பள்ளியின் கேட்டானது சுமார் 10 அடி உயரம் இருக்கும். மேற்படி 10 அடி கேட்டையும் தாண்டி யாராவது உள்ளே சென்று விளையாடுவார்களா என்றால் – இல்லை. உங்கள் பள்ளியிலிருந்து சுமார் 40 அடி தூரத்தில் அம்மாபேட்டை காவல் நிலையமும், மகளிர் காவல் நிலையமும் உள்ளது என்று சொன்னால் – சரிதான். உங்கள் பள்ளியிலிருந்து பாடம் நடத்தினாலும் அல்லது யாராவது அய்யோ அம்மா என்று சத்தம் போடடாலும் அருகில் உள்ள காவல்நிலையத்திற்கு கேட்கும் என்று சொன்னால் – கேட்காது.

அம்மாபேட்டை காவல்நிலையத்தில் உங்கள் பள்ளியை பார்த்தவாறு ஒரு கண்காணிப்பு கேமரா ஒன்று பொருத்தப்பட்டுள்ளது என்றால் – சரிதான். உங்கள் பள்ளியின் எதிர்புறம் உள்ள செல்வராஜ் சிமெண்ட் கடையில் கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டுள்ளது என்றால் – சரிதான். உங்கள் பள்ளியில் மொத்தம் எத்தனை வகுப்பறைகள் உள்ளது என்றால் –

11 வகுப்பறைகள் உள்ளது. மேற்படி பள்ளியில் 1 முதல் 5 வரையிலான வகுப்புகள் உள்ளது. சம்பவம் குறித்து உங்களுக்கு யார் தகவல் தெரிவித்தது என்றால் – பொதுமக்கள் தெரிவித்தார்கள். சம்பவ இட பள்ளி போக்குவரத்து, மக்கள் ஜனநடமாட்டம் நிறைந்த பகுதியில் உள்ளது என்றால் – சரிதான். நீங்கள் சம்பவ இடம் செல்வதற்கு முன்பாக போலிசார் சம்பவ இடம் சென்று என்ன நடவடிக்கை மேற்கொண்டார்கள் என்றால் – நான் செல்வதற்கு முன்பு போலிசார் அங்கு செல்லவில்லை.

நீங்கள் சம்பவ இடம் சென்று பார்த்து உங்கள் தகவலின் பேரில் தான் போலிசார் சம்பவ இடம் வந்தார்களா என்றால் – நான் சம்பவ இடம் சென்று பார்த்து கொண்டிருந்தபோது போலிசார் அங்கு வந்தார்கள். நீங்கள் போலிசாரிடம் நீங்கள் வருவதற்கு முன்பாகவே அவர்கள் சம்பவ இடத்திற்கு வந்து சென்றார்களா என்று விசாரித்து தெரிந்து கொண்டீர்களா என்றால் – இல்லை. குறிப்பாக ஒவ்வொரு வகுப்பறையிலும் அது எந்த வகுப்பு என்ற விபரத்தையும் வகுப்பறை எண்களும் குறிப்பிடப்பட்டள்ளதா என்றால் – அவ்வாறு குறிப்பிடவில்லை, 11 வகுப்பறைகள் இருந்தாலும் கீழே உள்ள மூன்று வகுப்பறைகள் மட்டுமே மாணவர்கள் குறைவாக இருந்ததால் செயல்பாட்டில் இருந்து வந்தது.

நான் சம்பவ இடத்திற்கு மாலை 07.00 மணிக்கு சென்று செல்போன் டார்ச் வெளிச்சத்தில் பார்வையிட்ட போது மாலை 07.30, 07.45 மணி இருக்கும். போலிசார் சம்பவ இடத்திற்கு மாலை 07.30 மணிக்கு வந்தார்கள். நீங்கள் சம்பவ இடத்திற்கு சென்றபோது சம்பவ இட பள்ளிக்கு அக்கம் பக்கம் இருந்த நபர்கள் யாராவது அங்கிருந்தார்களா என்றால் – இல்லை. சம்பவ இடத்திற்கு இரவு 07.30 மணிக்கு வந்த போலிசார் சுமார்

01.00 மணி நேரம் அங்கிருந்தார்கள். சாபொ.2 மற்றும் சாபொ.3 சொத்துக்களை போலிசார் எதனை கொண்டு எடுத்தார்கள் என்றால் இரும்பான பொருளால் உடைத்து எடுத்தார்கள். சாபொ.2, சாபொ.3–யை போலிசார் கைப்பற்றிய போது இரவு 08.00 மணி இருக்கும். அதசாஆ.2 மற்றும் அதசாஆ.3–ல் ஆய்வாளர் எழுத அதில் நான் கையொப்பம் செய்தேன். நான் அதசாஆ.3 ல் கையெழுத்திடும் போது இரவு 08.45 இருக்கும். நான் கையெழுத்து செய்த ஆவணத்தை பள்ளியில் வைத்துதான் கையெழுத்து போட்டேன் காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்யவில்லை.

சென்ன நேரத்தில் நான் சம்பவ இடத்திற்கு சென்று சொன்ன ஆவணங்களில் சொன்ன இடத்தில் வைத்து கையெழுத்து செய்திருக்கவில்லை என்றாலும் பின்னிட்டு போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில் உங்கள் மீது பிரச்சினை வரக்கூடாது என்பதற்காக காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்துவிட்டு போலிசாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் – சரியல்ல. நீங்கள் மேற்படி பள்ளியை பொறுப்புடன் பூட்டி வைத்து பராமரிக்காத காரணத்தினால் ஏற்பட்ட விபத்தில் இருந்து உங்கள் காத்து கொள்வதற்காக போலிசார் சொல்லிக்கொடுத்தது போல் பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் – சரியல்ல. இந்த வழக்கு சம்பவத்தில் இறந்ததாக சொல்லப்படுகின்ற நபர் ஒரு புத்திசுவாதீனம் இல்லாத நபர் என்றால் – சரிதான். மேற்படி உங்களது பள்ளியில் அருகில் உள்ள காலனியை சேர்ந்த நபர்கள் எந்த நேரமும் விளையாடி கொண்டிருப்பார்கள் என்றாலும் அப்படி விளையாடியபோது உங்களால் சரிவர பராமரிக்காத

பூட்டப்படாத வகுப்பறையில் இறந்துபோன புத்திசுவாதீனம் அற்ற நபர் தவறி கீழே விழுந்து ஏற்பட்ட விபத்து என்றாலும் அதிலிருந்து தப்பிப்பதற்காக பொய்யா சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் – சரியல்ல.

**மறுவிசாரணை.** இல்லை

ஒம்/– S. எழில் வேலவன்
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

### Sessions Case No.7/2020

| | |
|---|---|
| Deposition of witness for | : PW-7 |
| Name | : வேலுமணி |
| Father's / Husband Name | : அர்ஜுனன் |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Law and recording the Deposition of the Witness on 6th day of November 2025.

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை:-**

நான் தற்போது தாசநாயக்கன்பட்டி குரூப் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.02.2019-ம் தேதி அம்மாபேட்டை டவுன் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வந்தபோது பகல் 02.30 மணியளவில் நான் அலுவலகத்தில் இருந்தபோது நானும் எனது உதவியாளர் செந்தில்குமார் என்பவரும் அலுவலகத்தில் இருநதபோது பரத்குமார் த.பெ.தங்கராஜ் எங்கள் அலுவலகத்திற்கு வந்து தான் ஒரு கொலை செய்ததாகவும் என்னிடம் ஆஜராகுவதாகவும்

சொன்னார். அதன்பிறகு என்னிடம் பரத்குமார் ஒரு வாக்குமூலம் கொடுத்தார். அந்த வாக்குமூலத்தில் அவரது மாமா மகன் ஆறுமுகம் த.பெ.ரமேஸ் 03.02.2019–ம் தேதி திருவிக பாதையில் உள்ள மாநகராட்சி துவக்கப்பள்ளியில் எனக்கும் மாமா மகன் ஆறுமுகத்திற்கும் சண்டை வந்ததாகவும், அவர் என்னையும் என் அம்மாவையும் தகாத வார்த்தையால் திட்டினார் என்றும் அதனால் ஆறுமுகத்தை நான் வாயை பொத்தி இழுத்து சென்று பிளேடால் ஆறுமுகத்தில் குரல்வளையை அறுத்தும், கை, மணிக்கட்டு, காது ஆகிய பகுதிகளில் அறுத்ததாகவும், ஆறுமுகத்தின் முடியை பிடித்து சுவற்றில் அடித்ததாகவும் அப்போது ஆறுமுகம் மயக்கம் போட்டுவிட்டதாகவும், அருகில் இருந்த செங்கல்லை எடுத்து மூஞ்சியில் அடித்ததாகவும், பின் மண்டை முடியை பிடித்து அடித்ததாகவும், ஆறுமுகம் மயக்கநிலை அடைந்ததால் அங்கிருந்து வீட்டிற்கு சென்றுவிட்டதாகவும், வீட்டில் சம்பவத்தின் போது உடுத்தியிருந்த உடையை அங்கு கழட்டிவைத்துவிட்டதாகவும், பிறகு அங்கிருந்து ஒன்றும் தெரியாததுபோல் அம்மாபேட்டை ரவுண்டானா பக்கம் சென்றுவிட்டதாகவும், அங்கிருந்து போலிஸ் தேடுவதாக கூறி பயந்து கொண்டு சீலாவள்ளி ஏரிக்கு சென்று இரவு படுத்து கொண்டதாகவும், போலிஸ் பிடித்தால் தன்னை அடித்துவிடுவார்கள் என்று பயந்து கொண்டு என்னிடம் வந்து சரண் அடைந்ததாக வாக்குமூலம் அளித்தார். அந்த வாக்குமூலத்தை அவர் சொல்ல சொல்ல நான் எழுதி கொண்டேன். எதிரி என்னிடம் ஆஜராகி கொடுத்த வாக்குமூலம் என்னிடம் காட்டப்படுவதுதான். பிறகு நான் காவல் ஆய்வாளருக்கு தனி அறிக்கை ஒன்று தயார் செய்தேன். அதன்பிறகு எதிரி கொடுத்த வாக்குமூலத்தினை எனது தனி அறிக்கையுடன் எதிரியை

அழைத்து கொண்டு அம்மாபேட்டை காவல்நிலையம் சென்று காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். எதிர என்னிடம் கொடுத்த வாக்குமூலம் **அதசாஆ.4** ஆகும். என்னுடைய தனிஅறிக்கை **அதசாஆ.5** ஆகும். அன்றைய தினமே பகல் 03.45 மணியளவில் எதிரியை கைது செய்து என் முன்னிலையிலும் என் உதவியாளர் செந்தில்குமார் முன்னிலையிலும் காவல் ஆய்வாளர் விசாரிக்க அவர் தாமாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் என்னிடம் சொன்ன விபரத்தை அதில் சொன்னார், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் எனது உதவியார் செந்தில்குமார் என்பவரும சாட்சி கையொப்பம் செய்தோம்.

பிறகு அன்றைய தினமே எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின்படி 05.15 மணியளவில் எதிரியின் வீடு திருவிக பாதையில் உள்ள பரத்குமார் எதிரியின் வீட்டிற்கு சென்று முழுக்கை சட்டை ஒன்று, பேன்ட் ஒன்று, அரை பிளேடு ஒன்றையும் ஆய்வாளரிடம் ஒப்படைத்ததை காவல் ஆய்வாளர் அவர்கள் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து எங்கள் முன்னிலையில் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும் எனது உதவியார் செந்தில்குமார் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அதசாஆ.6** ஆகும். முழுக்கை சட்டை ஒன்று சாபொ.4, பேன்ட் ஒன்று சாபொ.5, அரை பிளேடு சாபொ.6 நீதிமனற்த்தில் உள்ளதுதான். எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அதசாஆ.7** ஆகும். ஆஜர் எதிரி நீதிமன்றத்தில் உள்ளவர் தான். அதுசம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)</u>

ஆஜர் எதிரி எழுத படிக்க தெரிந்த நபர் என்று சொன்னால் – சரிதான். எதிரியிடம் அவர் சொல்ல வேண்டிய சங்கதியை அவர் கைப்பட எழுதி தருமாறு நான் கேட்கவில்லை. அம்மாபேட்டை காவல்நிலைய பின்புறம் எங்களது அலுவலகம் உள்ளது. என்னிடம் முன்னிலையான போது எதிரி பேன்ட் சட்டை போட்டிருந்தார், அதன் நிறம் நினைவில்லை. எதிரி மட்டும்தான் எங்கள் அலுவலகம் வந்தார். எங்கள் அலுவலகம் மக்கள் நடமாட்டம் நிறைந்த பகுதி என்று சொன்னால் – சரிதான். எங்கள் அலுவலகத்திற்கு அருகில் உள்ள பெரும்பாலான கடைகளில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளது என்று சொன்னால் – சரிதான்.

எங்கள் அலுவலகம் வந்த எதிரியை சுமார் ஒரு மணி நேரம் விசாரித்தேன். எதிரி வாக்குமூலம் கொடுத்தபோது அதனை என் செல்போனில் உள்ள கேமரா மூலம் வீடியோ பதிவு செய்யவில்லை. எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து என்னுடைய அறிக்கை தயார் செய்து முடித்தபோது மணி 03.15 இருக்கும். எங்கள் அலுவலகத்திற்கு அருகில் ஆட்டோ ஸ்டேன்ட் உள்ளது என்றால் – சரிதான். எதிரி எங்கள் அலுவலகத்திற்கு வந்தபோது எங்கள் அலுவலகத்திற்கு சுமார் இரண்டு நபர்கள் அலுவல் ரீதியாக வந்திருந்தார்கள். எதிரியை அம்மாபேட்டை காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றபோது மணி பிற்பகல் 03.30 அல்லது 03.35 மணி இருக்கும். போலிசார் எதிரியை விசாரித்தபோது மாலை 04.00 மணி இருக்கும்,

அப்போது காவல்நிலையத்தில் பொதுமக்கள், போலிசார் நிறைய பேர் இருந்தார்கள். எதிரியின் வீட்டிற்கு சென்றபோது மாலை 05.15 இருக்கும். எதிரியின் வீடு ஓட்டு வீடு. எதிரியின் வீட்டிற்குள் நான் செல்லவில்லை. எதிரியின் சட்டையில் இரத்தம் தெளித்த மாதிரி இருந்தது. சட்டையின் எந்த பகுதியில் கறை இருந்தது என்று நினைவில்லை. அந்த சட்டையின் சைஸ் தெரியவில்லை. பேன்ட் என்ன கம்பெனி சேர்ந்தது என்றும் அதன் அளவும் என்னவென்று நினைவில்லை. எதிரி பயன்படுத்தியதாக சொல்லப்படுகின்ற பிளேடு Supermax பிளேடு. எதிரி என்னிடம் அளித்த வாக்குமூலத்தில் Supermax பிளேடு என்று சொல்லவில்லை. எதிரி என்னிடம் ஆஜரானபோது அவரின் கைகளில் காயம் ஏதுமில்லை.

எதிரியின் வீட்டிற்கு சென்றபோது அவரின் வீட்டின் அருகில் உள்ள நபர்கள் நிறைய பேர் இருந்தார்கள். எதிரி அவரது வீட்டிற்குள் இருந்து அவரது பேன்ட், சட்டையை எடுத்து வந்து ஆஜர் செய்தார். அதை எங்கிருந்து எடுத்தார் என்று எனக்கு தெரியாது. காவல் ஆய்வாளர் சொல்ல சொல்ல ஒப்புதல் வாக்குமூலத்தை காவலர் தட்டச்சு செய்தார். ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் கையெழுத்திடும்போது மாலை 05.00 மணி இருக்கும். நான் ஒரே கையெழுத்து தான் போட்டேன். சொல்வதுபோல் எதிரி என்னிடம் முன்னிலையாகி ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் கொடுத்திருக்கவில்லை என்றாலும் காவல் ஆய்வாளர் தயார் செய்து வைத்திருந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் கையெழுத் செய்தேன் என்றாலும் – சரியல்ல.

சொல்வதுபோல் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன எதிரி சொன்னது போல் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும்

கொடுத்திருக்கவில்லை என்றாலும் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் காவல் ஆய்வாளர் தயார் செய்து வைத்திருந்த ஆவணத்தில் நான் பின்னிட்டு கையெழுத்து செய்தேன் என்றாலும் – சரியல்ல. சம்பவ இடமும், காவல் நிலையமும் என்னுடைய அலுவலகமும், அருகருகில் உள்ளது என்று சொன்னால் – சரிதான். எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லையென்றாலும் நான் போலிசாரின் கையிருப்பு சாட்சி என்பதால் அரசு தரப்பிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் – சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**. இல்லை.

ஒம்/– S. எழில் வேலவன்
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

### Sessions Case No.7/2020

| | |
|---|---|
| Deposition of witness for | : PW-8 |
| Name | : டாக்டர். நாட்ராயன் |
| Father's / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Law and recording the Deposition of the Witness on 6th day of November 2025.

**<u>எதிரி ஆஜர்.</u>**

**<u>முதல் விசாரணை:–</u>**

நான் தற்போது அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் மருத்துவ அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 03.02.2019 அன் மாலை 04.30 மணியளவில் மேற்படி மருத்துவமனையில் அவரச சிகிச்சை பிரிவில் மருத்துவராக பணியில் இருந்தபோது விஜயலட்சுமி என்ற பெண்மணி 15–வயது மதிக்கத்தக்க ஆறுமுகம் என்ற ஆண் நபரை சிகிச்சைக்காக கொண்டு வந்திருந்தார். மேற்படி ஆறுமுகத்தை பரிசோதித்தபோது அவர் உயிரற்ற நிலையில்

இருந்ததை உறுதி செய்து உடல்கூராய்விற்காக பிரேத பரிசோதனை கூடத்திற்கு அனுப்பிவைத்தேன். இதுகுறித்து உரிய காவல்துறையினருக்கு தகவல் தெரிவித்தேன். நான் வழங்கிய விபத்து பதிவேடு நகல், காவல்துறை தகவல் படிவம் இதுதான், இது **அதசாஆ.8** ஆகும். இதுசம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)** இல்லை.

**மறுவிசாரணை.** இல்லை

ஒம்/– S. எழில் வேலவன்
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.